உ
சிவமயம்

கந்தரோடை

வவுனியா

# இந்து மாமன்றம்

1982 - 1990

## புதிய மண்டபத் திறப்பு விழா

# சிறப்பு மலர்

30 - 10 - 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெறிய தமிழ்மறைச் செல்வம்
ஆச்சிரம நூல் நிலையம்
கந்தரோடை

உ

சிவமயம்



ஸ்ரீ ஜய அருணாசல பொது நூல் நிலையம்
விநாயகர் இல்லம், கந்தரோடை, சுன்னாகம்

வவுனியா

## இந்து மாமன்றம்

## புதிய மண்டபத் திறப்பு விழா

# சிறப்பு மலர்

**30 - 10 - 1993**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசகரின் ஆசிச் செய்தி.

## இந்து மாமன்றமும், அதன் வளர்ச்சியும்.

நாம் வாழும் இந்தப் பரந்த உலகம் பல் உயிர்களேயும் உள்அடக்கி இருக்கிறது. இவையெல்லாம் வாழ்கின்றன, மடிகின்றன. நாம் மனிதர் மற்றயனவைபோல் வீணாய் மடியக்கூடாது அரிதான பிறவி மனிதப் பிறவி.

ஆன்மாக்கள் என்றும் உள்ள பொருள். '' பதியினைப்போல் பசு பாசம் அநாதி'' என்கிறார் திருமூலர். ''என்று நீ, அன்று நான்'' என்கிறார் தாயுமானவர். இறைவனும் என்றைக்கும் உள்ளவன் நாமும் என்றைக்கும் உள்ளவர்கள். எமக்கு இந்தவாழ்வை வாழ நீதி வேண்டும். இந்த நீதியை எப்பபடிப் பெறலாம் எங்கே பெறலாம். மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி என்போம். தெய்வ நீதிதான் எமது சைவநீதியாகும். மேன்மைகொள் சைவ நீதியை வளர்ப்பதுதான் குறிக்கோள் ஆலயங்கள்மூலம் இதனே வளர்க்கலாம்

முன்னாளில் - சங்க காலத்தில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் எனக் கட்டி வளர்த்தனர். இறைவனே வந்து வாதாடியுமிருக்கிறான். தலைமை தாங்கியும் இருக்கிறான். இதே போல் நாமும் வவுனியாவில் சைவம் தழைக்க ஆசைப்பட்டோம். அதன் முன்னோடியாக மாமடு ந. செல்லையா அவர்கள் விளங்கினார். திரு. செல்லையா அவர்கள் தொடர்ந்து சைவம்வளர ஒரு ஸ்தாபனம் உருவாகவேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தி வந்தார். இதேவேளை (1982) வவுனியா ஸ்ரீகந்தசுவாமி கோவில் கும்பாபிஷேக விழா மலர் ஆசிரியராக இருந்த திரு. ஆ. தியாகராசா அவர்களும் இதே விதமான சிந்தனையுடன் இருந்ததால், 1982 சித்திரை 1-ம் நாள் கண்டி வீதியிலுள்ள அவரது அரசவிடுதியில் கூடி '' இந்து மாமன்றம் '' ஆரம்பிக்கப்பட்டது. 1-வது நிர்வாக சபையில் கீழ்க்கண்டவாறு நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.

தலைவராக திரு. ந. செல்லையாவும், செயலாளராக திரு. பாலதயானந்தனும், திரு. பாலசுப்பிரமணியமும், உறுப்பினராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. நா. தர்மராசா ( அகளங்கன் ) ஆகியோரும் மற்றும் பலரும் இதற்கு இ. பாலச்சந்திரக் குருக்கள் ஆகிய நான் போசகராகவும் தெரிசெய்யப்பட்டோம். திரு. ஆ. தியாகராசா அவர்கள்இப்பொழுது தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபராக இருக்கிறார்.

தீவிர மதப் பற்றுள்ள திரு. ந. செல்லையா அவர்கள் நிலையான ஸ்தாபனம் இல்லாதிருந்தும் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் மதப்பிரசங்கங்ளுகம், காலத்துக்குக் காலம் விழாக்காலப் பூசைகளையும், நடாத்தி வந்தார். 1986-ம் ஆண்டளவில் திரு. பொ. கமலநாதன் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களால் காந்தீயத்துக்குரிய G. T. Z கட்டிடத்தை இந்து மாமன்றப் பாவனைக்குக் கிடைக்க வழிசெய்தார் இங்கே ஆ. தியாகராசா அவர்களும், திரு அகளங்கன் அவர்களும், ஆத்மஜோதி முத்தையா அவர்களும், புலவர் குணபாலசிங்கம் அவர்களும் விரிவுரைகள், பிரசங்கங்கள் செய்துவந்தனர். இதில் குறிப்பிடத்தக்க அளவில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களின் கதாப் பிரசங்கம் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலில் செய்வித்ததும் ஆகும்.

சிறிது காலத்தில் மீண்டும் அரசாங்க அதிபரை நாடி நா. செல்லையா அவர்களும், அ. பாலசுப்பிரமணியம் அவர்களும், மற்றும் இந்து மாமன்றத்தின் அங்கத்தவர்களும் பூங்கா வீதியிலுள்ள இந்து மாமன்ற நிலத்தைப் பெற்றனர். திரு. செல்லையா அவர்களின் முயற்சியினாலேயே இந்நிலம் கிடைத்தது மிகவும் பாராட்டுதற்குரிய விசயமாகும். இதேவேளையில் இரண்டாவது நிர்வாக சபை பிரம்மஸ்ரீ இ. பாலச்சந்திரக்குருக்கள், திரு. வை. செ. தேவராசா போசகர்களாகவும், திரு. நா. செல்லையா தலைவராகவும் திரு புஸ்பராசா செயலாளராகவும், திரு. K. T. தர்மராசா பொருளாளராகவும், இருந்தனர்.

பின்னர் டாக்டர் பாலசிங்கம் அவர்களைத் தலைவராகவும், திரு புஸ்பராசா அவர்களைச் செயலாளராகவும், திரு. க. சபாபதி அவர்களை பொருளாளராகவும் கொண்ட நிர்வாகசபை தெரிவு செய்யபட்டது. அப்பொழுது பிரம்மஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்கள் போசகராக இருந்தார். இந்நிலையில் சர்வோதயததின் வவுனியாப் பகுதிப் பொறுப்பாளராக இருந்த திரு. மகாதேவன் அவர்கள் ஓரளவு பணஉதவி செய்தார். அத்துடன் திரு. வை. செ. தேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசா அவர்கள் ஊக்கம்கொண்டு தானும் முதலிட்டு ஆரம்ப நிலையில் கட்டிடத்தை அமைத்தார். கட்டிடம் அமைக்கும் முன் இந்தக் காணியை வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்கள் சிரமதானம் செய்து உதவினர்.

1990-ம் ஆண்டு ஏற்பட்ட குழப்பநிலைகாரணமாக எல்லாமே மந்தநிலை அடைந்தது. இதன் பின்னர் 1992-ம் ஆண்டு 14-6-92 இறுதியில் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகசபைத் தெரிவில் கீழ்க்கண்டவாறு நிர்வாகசபை தெரியப்பட்டது போசகர்: பிரம்மஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்கள், தலைவர்: திரு. C. A. இராமஸ்வாமி (ஈசன்) உபதலைவர் திரு. கந்தையா; செயலாளர்; திரு. இ. கிருபாமூர்த்தி, உப செயலாளர்; திரு. அ. சிவநாதன், பொருளாளர்: க. சபாபதி மற்றும் கீழ்க்காணும் உறுப்பினர்களும் தெரிவாகினர்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக சபையின் தலைவர் C. A. இராமஸ்வாமி அவர்களின் முழுமுயற்சியினாலும், உறுப்பினர் திரு. வை. செ. தேவராசா அவர்களின் ஒத்துழைப்பினாலும், திரு. இ. கிருபாமூர்த்தி திரு. க. சபாபதி அவர்களின் கண்காணிப்பாலும் இந்தப் புதிய மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

இதன் வளர்ச்சியில் நாம் எல்லோரும் கூடி முயற்சியும் – ஆதரவும வழங்குவதுடன், அரசாங்கத்தின் உதவியும் மிகஅவசியம் என்று உணர்கிறேன். கட்டடம் அமைப்பதில் ஏற்பட்டுள்ள மேலதிக பணக் கொடுப்பனவுகளைச் சீர்செய்வதற்கு நல்ல மனம் படைத்தவர்கள் முன்வந்து நிதி உதவிகள் செய்யவேண்டும்.

இந்த மண்டபத்தில் சமய வகுப்புகளும், சிறுவர் பாடசாலை ஒன்றும் இயங்க வேண்டும். குரு பூசைகளைத் தவறாது செய்ய வேண்டும் இவ்வாறு செய்து சைவத்தையும், எமது பண்புகளையும் மேலோங்கச் செய்யவேண்டும். "மக்கள் சேவையே மகேசன் சேவை" ஆலம் வித்தை இட்டிருக்கிறோம். இது விருட்சமாகி. பரந்துபட்டு நிழலில் பலர்வந்து ஆறி அமர்ந்து, மனநிறைவு பெறவேண்டும் என்பது எனது வேணவா.

சுபம்.

பிரம்மஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்கள்,
(போசகர், இந்துமாமன்றம்)

ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாமன்றத் தலைவரின் செய்தி.

பத்து வருடங்களின்முன் திரு. ந. செல்லையா அவர்களினதும், திரு, ஆ. தியாகராசா அவர்களினதும், பிரம்மஸ்ரீ இ. பாலச்சந்திரக் குருக்களினதும் கருவில் உருவானது இந்து மாமன்றம், இன்று பூங்கா வீதியில் முழுமையான ஒரு கட்டிடத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த மண்டபம் சமயப் பெரியார்கள் வந்து தங்கியிருந்து பிற இடங்களுக்குச் சென்று சமயப்பிரசங்கம், சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கு வசதியாக சுகாதார வசதிகளும், அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது பிரபல வர்த்தகர் திரு தி. க. இராசலிங்கம் அவர்களின் அன்னை கந்தையா புவனேஸ்வரியின் நினைவாக தண்ணீர்த்தாங்கி அமைத்துத் தந்தார்.

சமூகத் தொண்டரும், சைவசமயம் வளர்க்கப் பெரும்பாடுபடுபவருமான திரு. வை. செ. தேவராசா அவர்கள் தனது சொந்தச் செலவில் தனது அன்னையின் நினைவாக கிணறு வெட்டிக் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

முன்பக்க மதிலை திரு. புவனேந்திரன் கட்டித்தர முன்வந்துள்ளார். மின்விநியோக வசதிகளை மீற்றோ ரேடேஸ் செய்துள்ளனர், மற்றும் உதவிகள் விபரம் உள்ளே தரப்பட்டுள்ளது கட்டிடம் முழுமைபெற உழைத்த செயலாளர் இ. கிருபாமூர்த்தியையும், பொருளாளர் க. சபாபதி அவர்களைப் பெரிதும் பாராட்டுவதோடு கட்டிட வேலைகளைத் தனது சொந்த வேலையாக இரவும்பகலும் கண்காணித்துச் செயற்பட்ட திரு. வை.செ. தேவராசா அவர்களின் பங்கு மிகமகத்தானது, இவரையும் பாராட்டுகிறேன்.

இந்த மண்டபம் மக்களுக்கு சமயப் பணியும், சமுதாயப் பணியும் ஆற்றவேண்டியுள்ளதால். கருணையுள்ளங்கொண்டவர்களும், நல்லெண்ணம் உள்ளவர்களும் இயன்றளவு உதவிசெய்து எண்ணம் ஈடேற வகைசெய்யவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டு விடைபெறுகின்றேன்,

**C. A. இராமஸ்வாமி,**
தலைவர்.
இந்து மாமன்றம், வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக் குழுத் தலைவர் உரை

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்."

இந்து மாமன்றம் சகல வளங்களுடன் தினமும் சைவப் பணிசெய்து வவுனியா வாழ் சைவ மக்களுக்கும், இலங்கைவாழ் சைவ மக்களுக்கும் பணியாற்றிட வாழ்த்துகிறேன்.

இம்மாமன்றம் திருமுறைகளையும், சைவ சித்தாந்த நூல் களையும் பதிப்பித்து வவுனியாவாழ் சைவ மக்களுக்கு வழங்கி இன்று அருகிப்போன நிலையிலுள்ள நூல்களைக் காப்பாற்றவேண்டு மென வாழ்த்துகிறேன் ;

வணக்கம்

வை. செ. தேவராசா,
(செயலாளர், தர்மகர்த்தா சபை)
ஸ்ரீ கந்தசுவாமி கோவில்,
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் அறிக்கை.

இந்துமத வளர்ச்சியுடன் தமிழையும் வளர்க்க வேண்டும்; மதத்தினூடாக மொழியைப்பாதுகாக்க வேண்டும். அதற்கொரு பலமான ஸ்தாபனம் வேண்டும் அதுவும் வன்னி மண்ணில் செயல்பட வேண்டுமென்ற உயரிய நோக்கைக் கொண்ட திரு. நா. செல்லையா அவர்களின் அயராத முயற்சியின் பயனாக உருவாக்கப்பட்டது இந்து மாமன்றம்.

பணத்தைக் கணக்குப் பாராமலே செலவு செய்து இந்த மன்றத்தை உருவமைத்துள்ள பெருந்தகை எம் தலைவர் திரு. C. A. இராமஸ்வாமி அவர்களது அயராத முயற்சியின் பயனாகவும், திரு. வை. செ. தேவராசா அவர்களின் உந்தலாலும் வளர்ந்துள்ளது.

வளர்ந்துள்ள இம்மன்றத்தைக் காக்கவேண்டியதும், உருவாக்கப்பட்ட எண்ணக் கருவைச் செயலாக்கவேண்டியதும் ஒவ்வொரு இந்து மகனினதும் கடமையாகும். காப்பதென்பதும் செயல்பாடுகளின் பலாபலன்களும் பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளது. ஒருவர் செய்வதைப் பார்த்திராது, எம்மை வந்து கேட்கவில்லை என்று கூறாது வசதி படைத்த இந்துக்கள் தம்மால் இயன்ற உதவியைச்செய்து, மன்றச் செயற்பாடுகளில் பங்கேற்று நோக்கம் நிறைவடைய உதவ வேண்டுமெனக் கேட்பதுடன் இதுவரை எம்மன்றச் செயற்பாடுகளுக்கு உதவிய அனைவருக்கும் நன்றியையும் கூறிக்கொள்கின்றேன்.

நன்றி.

இங்ஙனம்

இ. கிருபாமூர்த்தி

(கௌரவ செயலாளர்)

இந்து மாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெறிய திருமுறைச் செல்வம்
ஆச்சிரமம் - நூல் நிலையம்
கந்தரோடை

# வவுனியா அரசாங்க அதிபரின் ஆசிச் செய்தி

## பயனுறு பணிகள் பரவட்டும்

இறை நம்பிக்கையுடன் பெரியோர்களைக் கௌரவித்து, எல்லோரையும் மதித்து நல்லநெறியில் - பக்தி வழியில் செல்வோர் ஆனந்தமாகவும் அமைதியாகவும் வாழ்கின்றார்கள்.

" இன்பம் வரும்போது துள்ளிக்குதிக்காமலும் துன்பம் வரும்போது துவண்டு விழாமலும் சுகதுக்கத்தை சமனாகக் கருதவேண்டும் " என்பர் சான்றோர்.

நல்ல நூல்களைப் பயில்வதனாலும், பயின்ற சான்றோர் உரை கேட்பதனாலும், அவர்களைப் பின்பற்றுவதனாலும் ஆனந்தமாகவும் அமைதியாகவும் வாழலாம். கடந்த காலங்களில் நல்லவற்றைப் பார்க்கவும், கேட்கவும் உணரவும் இந்துமாமன்றம் பணியாற்றியது, தொடர்ந்து மன்றம் சொந்தக் கட்டிடத்தில் இயங்க இறையருள் கூடியமையும் நன்மைக்கென அறிவோம்.

வவுனியா இந்து மாமன்றம் ஆன்மீகப்பணியுடன், துயர கற்றும் சமூகப்பணியும் சிறப்பாக ஆற்றிட இறையருளை இறைஞ்சி மன்றம் வளரவும், பயனுறு பணிகள் பரவலாகச் செய்யவும் வாழ்த்துகின்றேன்.

எஸ். தில்லைநடராசா
*அரச அதிபரும்,*
*மாவட்ட ஆணையரும்,*
*வவுனியா.*

*1993 – 10 – 25*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா இந்துமாமன்றம் தனது 10வது ஆண்டு நிறைவையொட்டி

# வெளியிடும் விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்கல்

வவுனியா இந்து மாமன்றம் தனது 10 ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

இச் சங்கம் 1982ல் நிறுவப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

இளம் சமுதாயத்தினரை சமூகத்தில் நல் வழிப்படுத்தி நல்ல பிரஜைகளாக்க வேண்டும்.

சமய ரீதியான நடவடிக்கைகள் மேற்கண்ட குறிக்கோளை பிரதி பலிப்பனவாக அமைதல் வேண்டும்.

திட்டமிட்ட செயல்பாடுகள் மூலம் தான் இம்மன்றத்தை மக்கள் மனத்தில் ஏற்க கூடியதாகவும், வளர்க்கக் கூடியதாகவும் அமைதல் வேண்டும்.

முக்கியமான மற்றைய சமய அமைப்புக்களுடன் நல் உறவு அமைய வேண்டும். சாந்தி, சமாதானம் நிலவ வேண்டும் என்ற மனப்பாங்குடன் செயற்படுதல் சமுதாயத்துக்கு நன்மை பயக்கும்.

இம் மன்றம் அமைத்துள்ள கட்டிடம் மேற் குறிப்பிட்டவற்றை நிறைவேற்ற பாடுபடவேண்டும்.

இம் மலருக்கும் இம் மலரை வெளியிடும் குழுவினருக்கும் மன்றத்தினருக்கும் எனது ஆசிகள். ! ! !

சி. நவரத்தினராஜா,
*கல்விப்பணிப்பாளர்,*
*வவுனியா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேசச் செயலாளரின் ஆசிச் செய்தி.

இந்து மாமன்றக் கட்டடத் திறப்பு விழாவிலே வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். வவுனியாப் பிரதேசத்திலே ஆன்மீகத் துறையிலே அளப்பரிய சேவையை குறுகிய காலத்தினுள் இந்து மாமன்றம் ஆற்றிவருகின்றது என்பதை நாம் அறிவோம்.

பல விரிவுரைகள், பிரசங்கங்கள் போன்றன கோவில்களில் நடைபெற்றுவந்தன. இன்று கட்டடம் அமைக்கப்பட்டதன் மூலம் இப்படியான செயல்முறைகள் இக்கட்டடத்திலேயே நடைபெறக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த இந்து மாமன்றம் பல்வேறு சேவைகளை ஆற்றி தோற்றமும் முடிவும் பெறாத தெய்வக் கோட்பாடுடைய கிரியைகள் பல பொதிந்த, தன்னைச் சார்ந்தோர்க்கு இம்மை, மறுமை இரண்டையும் தரவல்ல இந்து சமயத்தை வளர்க்க மேலும் பல பணிபுரிய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

சொ. அமிர்தலிங்கம்,
(பிரதேசச் செயலாளர்)
வவுனியா

*26 - 10 - 93*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 - 06 - 1992 தெரிவாகிய

# நிர்வாகசபை உறுப்பினர்கள்

*போசகர் :*

**சிவஸ்ரீ இ. பாலசச்சந்திரக் குருக்கள்**

*தலைவர் :*

**திரு. C. A. இராமஸ்வாமி**

*உபதலைவர் :*

**திரு. த. கந்தையா**

*செயலாளர் :*

**திரு. இ. கிருபாமூர்த்தி**

*உபசெயலாளர் :*

**திரு. அ. சிவநாதன்**

*பொருளாளர் :*

**திரு. க. சபாபதி**

*நிர்வாக உறுப்பினர்கள் :*

திரு. செ. தருமரெத்தினம்

திரு. வை. பாலச்சந்திரன்

திரு. இ. வீரசிங்கம்

திரு. பா. யோகநாதன்

திருமதி. தருமலிங்கம்

திரு. வை. செ. தேவராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள்

தமிழ்மணி
அகளங்கன்

வேதங்கள் இறைவனால் அருளிச் செய்யப்பட்டவை. திருமுறைகள் இறையடியார்களால் அருளிச் செய்யப்பட்டவை. வேத; ஆகமகக் கருத்துக்களின் சாரங்கள் திருமுறைகளிலே மலிந்து கிடக்கின்றன என்பர் அறிஞர். திருமுறைகளைத் தமிழ் வேதங்கள் என்று கூறுகின்ற வழக்கும் உண்டு.

இறைவன் தானாகக் கூறினாலென்ன, தனது மெய் யடியார்கள் மூலமாகக் கூறினாலென்ன இரண்டும் இறைவனது வாக்குக்கள் தாம்; இறைவனே சிவனடியாராக வந்து அருள் பாலித்த பக்திக் கதைகள் பல, பெரியபுராணத்திலே இடம் பெற்றிருக்கின்றன. எனவே வேதங்களின் மதிப்பு திருமுறைக ளுக்கும் உண்டு. அதாவது திருமறை வடநாட்டு வேதம். திருமுறை தென்னாட்டு வேதம்.

திருமுறைகள் பன்னிரண்டாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் முதல் பதினெரு திருமுறைகளை இராஜ ராஜசோழ னின் காலத்தில் நம்பியாண்டார் நம்பி அவர்கள் தொகுத் தளித்தார்கள். முதல் மூன்று திருமுறைகளாக திருஞான சம்பந்தர் தேவாரங்களும், அடுத்த மூன்று திருமுறைகளாக அப்பர் சுவாமிகள் தேவாரங்களும், ஏழாந்திருமுறையாக சுந்தரர் தேவாரங்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

இம்மூவரும் தேவார முதலிகள் என்று அழைக்கப்பட் டனர். ஏழுதிருமுறைகளையும் சேர்த்து அடங்கல் முறை என அழைக்கப்படும் வழக்கம் எம்மத்தியிலும் உண்டு.

எட்டாம் திருமுறையாக மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம், திருக்கோவையார் ஆகிய நூல்கள் வகுக்கப்பட்டன. மாணிக்கவாசகரையும் சேர்த்து சமயகுரவர்கள் என இந்நால் வரும் போற்றப்படுகின்றனர்.

ஒன்பதாந் திருமுறையாக திருவிசைப்பா, திருப்பல் லாண்டும், பத்தாம் திருமுறையாகத் திருமந்திரமும் பதினொ ராம் திருமுறையாக, காரைக்காலம்மையாரின் பிரபந்தங்கள், பட்டினத்தார் பாடல்கள், நக்கீரர் முதலியவர்களின் பாடல் கள் தொகுக்கப்பட்டன.

நம்பியாண்டார் நம்பியின் பின் வாழ்ந்த சேக்கிழார் சுவாமிகள் அநபாயசோழனின் முதலமைச்சராக இருந்து தொண்டாற்றிப் பின் பெரியபுராணம் பாடினார். பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறையாகப் போற்றப் படுகின் றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணத்தின் முதற்சொல்லாக உலகெலாம் என்ற சொல் விளங்குகின்றது. சிவபெருமான் சேக்கிழார் சுவாமிகளுக்கு உலகெலாம் என்று அடியெடுத்துக்கொடுக்க அதை முதற்சொல்லாகக் கொண்டு சேக்கிழார் சுவாமிகள் "உலகெலாம் உணர்ந்தோதற் கரியவன்" எனப் பாடத்தொடங்கினார். பெரியபுராணத்தில் மொத்தம் பதின்நான்கு இடங்களில் உலகெலாம் என்ற சொல் இடம்பெறுகிறது. அதுமட்டுமின்றி, இறுதிப் பாடலின் இறுதிச்சொல்லாகவும் உலகெலாம் என்ற சொல்லே அமைந்திருக்கின்றது.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்

என்பதே பெரியபுராணத்தின் இறுதிப்பாடல் முதற் பாடலின் முதற்சொல்லாகவும், இறுதிப்பாடலின் இறுதிச் சொல்லாகவும். உலகெலாம் என்ற இறைவாக்கை இனிதே அமைத்தார் சேக்கிழார் சுவாமிகள்.

பன்னிரு திருமுறைகளிலே முதலாம் திருமுறையில் முதலாம் பாடல், திருஞானசம்பந்தர் "தேவாரமாகிய தோடுடைய செவியன் -" என்பது தோ் என்ற எழுத்து த் என்ற மெய்யெழுத்தோடு ஓ என்ற உயிரெழுத்துச் சேர்ந்து உருவாகின்ற உயிர்மெய் எழுத்தாகும். த்+ஓ=தோ திருமுறைகளின் முதற் பாடலிலேயே ஓ என்ற உயிர் நிற்கின்றது.

மேலே காட்டிய இறுதிப் பாடலின் இறுதி எழுத்து ம் (எல்லாம்) முதற் பாடலின் முதலெழுத்தில் ஓ. வும், இறுதிப் பாடலின் இறுதி எழுத்தில் ம் என்பதும் அமைந்து, ஓ-ம் என்பதற்குள் பன்னிரு திருமுறைகளும் அடங்கிவிடுகின்ற உண்மையைப் பார்த்து வியக்காதவர்கள் யார் இருக்கின்றார்கள்.

ஓம் என்னும் தாரக மந்திரத்தின் உட்பொருளாகப் பன்னிரு திருமுறைகளும் விளங்குகின்ற தன்மையை இது எடுத்துக்காட்டுவதாகக் கொள்ளலாம். திருமுறைகள் வீடுகள்தோறும் இருக்கவேண்டியவை. வீதிகள்தோறும் ஒலிக்கவேண்டியவை.

தமிழ்மணி
"அகளங்கன்"
பம்பைமடு-வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறம்புறம் திரிந்த செல்வமே

குழந்தை அழுகிறது; அன்னை அணைக்கிறாள்; பாலூட்டுகிறாள்; பள்ளிகொள்ளவைக்கிறாள். அக்குழந்தைக்கு எந்த நேரத்தில் என்ன தேவையென்பதை அதன் தாய் நன்கு அறிந்திருக்கிறாள். என்னவேலை செய்துகொண்டிருந்தபோதும், எவரோடு கலந்துரையாடல் நடத்திக் கொண்டிருந்தபோதும் வேளையறிந்து பாலூட்டுவாள், ஒரு குழந்தைக்குத் தாயான இந்த மானிடத்தாய் - அண்டங்களனைத்தும் பரந்து விரிந்திருக்கின்ற அத்தனை ஆன்மாக்களையும் தவறாது கவனித்து' வேளை தவறாது உணவளித்து, ஒவ்வொரு கணமும் காத்து வளர்த்து வருகின்ற தாயே இறைவனின் திருவருட் சக்தியான அன்னை பராசக்தி.

தமது குழந்தை எங்கு சென்றாலும் அதிலே ஒரு கண் வைத்த நிலையில் தனது கடமைகளையாற்றிக் கொண்டிருக்கும் தாய், நடக்கின்ற குழந்தை விழப்போகின்றதென்றால் உடனே ஓடிச்சென்று தூக்கிக் கொண்டுவிடுவாள்; பிள்ளையைக் காத்து கொண்டுவிடுவாள். இவ்வுலகிலே, இப்பிறவியிலே இணைந்திருக்குமட்டும் இத்தாய் தனது குழந்தைக்குரிய பணிவிடைகளைப் புரிவாள். ஆனால், உலக மாதாவாகிய அன்னை பராசக்தியோ ஒரு குழந்தையோடு நின்று விடுவதில்லை; ஒரு குடும்பத்திலுள்ள பிள்ளைகளோடும் நின்றுவிடுவதில்லை; மாறாக, உலகமெங்குமுள்ள ஆன்மக் குழந்தைகளோடு தொடர்புகொண்டு அவர்கள் அழுந்தோறும் அணைக்கும் அன்னையாக, பால் நினைந்தூட்டும் தாயிலுஞ்சாலச் சிறந்ததொரு தாயாக இப்பிறவியில் மட்டுமின்றி முன்பிருந்த அத்தனை பிறவிகளிலும் சேர்ந்திருந்ததோடு, இனிக் கிடைக்க விருக்கும் பிறவிகளுக்கும் தொடர்ந்து பின்செல்லவுந் தயாராகவுமிருக்கின்ற தாயாக உலகமாதா திகழ்கின்றாள்.

இன்னுங் கொஞ்சம் உண்ணமாட்டாயா? என்று இரங்கும் தாயார்க்கு மத்தியில், ஊனினை உருக்குகின்ற தாயாராக மிளிரும் இறைவன் திருவருள், அந்த அளவோடு நின்றுவிடாது, உள்ளத்திலே ஒளியினைப் பெருக்கி, முடிவில்லாத ஆனந்தமெனப்படுகின்ற தேனினைச் சொரிந்து, எத்தனை பிறவியினை ஒரு ஆன்மா எடுக்கவேண்டியிருந்தாலும், அத்தனை பிறவிகளிலும் ஆன்மாவுக்குப் பின்னாலே தொடர்ந்து சென்று அதனைக் காப்பாற்றுகின்ற பேரருள் தன்மை நிறைந்த கருணைக் கடலாகவும விளங்குகின்றாள் - அந்தத் தாயின் பாதாரவிந்தங்களைப் பற்றிப் பிடித்தவர்க்குப் போலியான உலகப்பற்று தானாகவே நீங்கிவிடும். இதனை மணிவாசகப் பெருமானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

எனக் கூறியருளியமை நினைந்து நினைந்து உள்ளம் நெகிழ்ந்து நெகிழ்ந்து போற்றத்தக்கது.

காரைநகரைப் பிறப்பிடமாகவும், வவுனியாவிலுள்ள மாமடுவை வசிப்பிடமாகவுங் கொண்டு விளங்கிய **திரு. ந. செல்லையா** அவர்களின் எண்ணத்தில் முகிழ்த்து வவுனியா நகரில் உருவாகிய இந்துமாமன்றம் சிவதருமப்பணியில் முன்னின்றுழைக்கும் திரு. சி. ஏ. இராமசுவாமி அவர்களைத் தலைவராகக் கொண்டு அவரது பொருளும் இறைவனின் அருளுஞ் சேர்ந்து ஏனைய அன்பர்களது ஒத்துழைப்போடு தனக்கென ஒரு மண்டபத்தைக் கொண்டு மிளிர்வதோடு எதிர்கால இறைபணிக்கு நிலைக்களனாகவும் அமைந்திருப்பதை காணுகின்றபோது இறும்பூதெய்துகின்றேன்.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே!

அன்பன்
(க. ஐயம்பிள்ளை)
திட்டப் பணிப்பாளர்,
புனர்வாழ்வு, புனர்நிர்மானம்

கச்சேரி,
வவுனியா.
26-10-93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லம்,

ஓம் சுத்த சக்தி

# வாழ்த்துகின்றோம்

கடந்த 1982ம் ஆண்டளவில் பெரியவர் திரு. ந. செல்லையா அவர்களின் முயற்சியால், இம்மன்றம் ஆரம்பமாகியது. இம்மன்றம் தனக்கென ஒரு கட்டடத்தை அமைக்கவும், எதிர்காலத்தில் சமய், சமூகத் தொண்டாற்ற பூங்கா வீதியில் அருமையான சைவச் சூழலில் ஒரு காணித் துண்டை அன்றைய அரசாங்க அதிபர் திரு கே. சீ· லோகேஸ்வரன் அவர்களின் உதவியால் பெற்றுக்கொண்டது.

இக் காணியில் எதிர்காலத்தில் அமைய இருக்கும் கட்டடத்திற்கான அத்திவாரமும் நிலமட்டத்தில் இடப்பட்டும் இருந்தது. 1990ம் ஆண்டில் ஏற்பட்ட வன்செயல்களினால் வவுனியா நகர மக்களில் 98 சதவிகிதமான மக்கள் நகரத்தை விட்டு வெளியேறிவிட்டதால் கட்டட வேலைகளை தொடர முடியவில்லை.

இதைத் தொடர்ந்து 1992ம் ஆண்டில் இம்மன்றம் புனரமைக்கப்பட்டு வவுனியா பிரபல வர்த்தகரும் சமூகத் தொண்டருமாகிய திரு. சீ. ஏ. இராமஸ்வாமி அவர்கள் தலைமையில் ஒரு புதிய நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டது. தலைவரும் நிர்வாகமும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியினால் சுமார் மூன்று இலட்சம் ரூபா வரை முதலீடு செய்து ஒரு கட்டடத்தை அமைத்துள்ளார்கள்.

இம்மன்றம் எதிர்காலத்தில் நல்ல பல சமய சமூகப் பணிகளில் ஈடுபடவேண்டும் எனவும், ஏற்கனவே பல ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்துடன் இணைந்து, இந்து கலாச்சாரத்தையும், கலை கலாச்சாரத்தையும் வளர்க்கப் பெரிதும் உழைக்க வேண்டும் எனவும், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் அதன் நிருவாக மற்றும் பொதுச்சபை உறுப்பினர்கள் சார்பாக வாழ்த்துகின்றேன்.

நா. சேனாதிராஜா (சமாதான நீதிவான்)
(தலைவர்)
சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்

வவுனியா
25- 10- 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# ஆசிச் செய்தி

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேழ்வி முல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

அன்னை பூமியாம் தமிழகத்திலே அறம் செழித்தோங்கவும் மறம் கடிந்து சமய சமூக ரீதியில் பெரியார்கள் அரும் பணி புரிந்த பொற்காலத்தை படம் பிடித்துக் காட்டுவதான சேக்கிழார் சுவாமிகளால் அருளப்பட்ட பெரியபுராண வாக்கியங்களே மேலே தரப்பட்டுள்ளன.

அப்படியான ஓர் சமய வளர்ச்சியின் போக்கின் ஆரம்பம் மீண்டும் நிகழ்வதன் முன்னோடி நடவடிக்கை எமது வன்னி நாட்டிலும் சமீபகாலங்களில் நிகழ்வதை நாம் காண்கின்றோம்.

இந்த வரிசையில் வவுனியா இந்து மாமன்றம் பெரும் பங்காற்ற வேண்டும். அதற்கேற்ப ஆத்மீக நல்ஒழுக்க ரீதியில் இந்துமக்களை மட்டுமல்ல முழு மனித குலத்துக்கும் இவ் விஸ்தாபனம் தொண்டுபுரிய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென இறைஞ்சுவோமாக.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அன்பன்
செ. பத்மநாதன்
தலைவர்
சிதம்பரபுரம் சிவாலய திருப்பணிச் சபை
சாஸ்திரிகூழாங்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நிதியுதவியவர்கள் விபரம்

ரிக்கட் விற்பனை மூலம்

1. திரு மாரிமுத்து கதிர்காமநாதன் ரூ 5000/-
இ. கருணாமூர்த்தி & Co. வவுனியா

2. திரு M. வேலாயுதம் (Bar) ரூ 5000/-
மில் வீதி, வவுனியா

3. திரு வை கனகலிங்கம் ரூ 5000/-
ஈஸ்வரன் லொட்ஜ், 174, 4ம் குறுக்குத் தெரு
கொழும்பு.

4. திரு ஏகாம்பரம் இரத்தினேஸ்வரன் ரூ 5000/-
E K.T 29, பழைய சோனகத் தெரு, கொழும்பு

5. திரு ஆண்டியாபிள்ளை பெரியண்ணன் ரூ 2500/-
குளோப் ரேடர்ஸ். வவுனியா

6. திரு பு. கலைநாதன் ரூ 5000/-
சுப்பிரமணியம் & கோ, 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு

7. திருமதி பாக்கியம் கனகரத்தினம் ரூ 5000/-
SKK & சன்ஸ், வவுனியா (காலஞ்சென்ற

8. திரு கருப்பையா செல்வராசா ரூ 1500/-
காஞ்சனா நகை மாளிகை வவுனியா

9. திரு மு[illegible] மாணிக்கவாசகர் ரூ 5000/-
குளோப் மில், பண்டாரிகுளம், வவுனியா

10. திரு M. இராமசாமி, திருஇ. சண்முகநாதன் ரூ 1000/-
கொண்டா மோட்டர்ஸ், கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா

11. திரு விஜயரத்தினம் ரூ 5000/-
அரசன் கம்பனி, 4ம் குறுக்குத் தெரு கொழும்பு.

12. திரு சி. ஞானசம்பந்தன் ரூ 5000/-
G. H. A. De சில்வா & கம்பனி. வவுனியா.

13. நடராசா தனபாலசிங்கம் ரூ 5000/-
மார்கட். வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதியுதவி செய்தவர்கள்

ரசீதுப்படி;

1. ஆறுமுகம் சபாநாதன் ரூ 5000/-
   சிற்றி ஏஜென்சி 1ம் குறுக்குத் தெரு, வவுனியா.
2. திருமதி இராஜமனோகரி புலேந்திரன் ரூ 1000/-
   கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சர்
3. மின்சார சபை ஊழியர் ரூ 100/-
   பெயர் வெளியிடவில்லை
4. S. A. முருகேசு ரூ 1000/-
   பெருமாள் சென்னப்பன் ரூ 1000/-
   'ஈசன்' ஸ்தாபன ஊழியர்கள்
5. சென்னப்பன் சூரியகுமார் ரூ 1000/-
6. இராமசாமி துளசி ரூ 1000/-
7. சண்முகம் நாதன் ரூ 1000/-

## மேலும் உதவியவர்கள்

திரு வை. செ. தேவராசா (கண்ணகி)
கிணறு வெட்டி உதவியது

திரு தி. க இராஜலிங்கம்
தண்ணீர் தாங்கி அமைத்து உதவியது

METRO TRADERS புகையிரத நிலைய வீதி, வவுனியா.
மின்சார இணைப்பைச் செய்து மின்சாரம் வழங்கியமை

திரு செ. இராசேந்திரம் D. O. A. நீர்ப்பாசன திணைக்களம்
முன் மதில் அமைத்து உதவியமை

திரு இ. கிருபாமூர்த்தி செயலாளர், இ . மாமன்றம்
செங்கல் உதவியது

திரு க. சபாபதி பொருளாளர், இந்து மா மன்றம்
தண்ணீர் விநியோகம் - பைப் வசதி உதவியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெறிய திருமுறைச் செல்வம்
ஆச்சிரமம் நூல் நிலையம்
கந்தரோடை

விஜய அனந்தன் பொது நூல் நிலையம்
சிவாக்கர் இல்லம், கந்தரோடை, சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org